உ

சிவமயம்



யாழ் வடமராட்சி துன்னாலையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட உயர் சைவ வேளாளர்

## அமரர் துரைச்சாமி இரத்தினம்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# அஞ்சலி மலர்

02.10.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தலைவனாக இருந்து
கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்து வளர்த்து உயர்வளித்து
இறைவனடி சேர்ந்த
எங்கள் குலதெய்வத்தின் பாதக்கமலங்களில்
இம்மலரினை காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"



மலர்வு
07.11.1940

உதிர்வு
02.09.2016

அமரர்

# துரைச்சாமி இரத்தினம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டது துர்முகியில் அமைந்திட்ட ஆவணியில்
பூண்டதொரு பூர்வ பக்கப் பிரதமையில் - நல்லான்
இரத்தின மென்பவனாம் சித்தி பல கண்டவனாம்
இத்தினத்தில் இறைவனடி சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் லிடர்ப்படோம் நடலையில் லோம்
ஏமாப்போம் பிணி அறியோம், பணிவோம் அல்லோம்
மின்பமே யெந்நாளுந்துன் பமில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்க வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்ம் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத்தக்க அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்ட அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானு மதுவே வேண்டி யல்லால்
வேண்டும் பரிசொன்றுன் டென்னியும்
அதுவும் உந்தன் விருப்பன்றோ!

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
யடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
வயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனே பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்
செய்மின் குழாம்புகுந்து
தண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போன்
அடியின் கீழிருக்க

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறையவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிள் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய் அதிதீரா
அத்துய ரதுகொட சுப்பிர மணிபடும்
அப்புனம் மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலதெய்வ வணக்கம்

## கொட்டிக் குளக்கரை விநாயகர் துதி

வேத முதல்வனே விண்ணவர் காணா விழுப்பொருளே
ஏத மழிப்பவ கொட்டிக் குளக்கரை ஏற்றவரே
நாத னுனதடி தான்துனை யென்றே பணிந்தனமே
பாத மணுகிடு மாறருள் செய்குதி போற்றினனே

## பிரத்தியங்கிளி காளி துதி

உற்றபிணி எதுவெனிதும் ஓடிவந்து
ஒண்பொருளே காளியம்மா என்றுபாடி
இற்றைவரை பணிந்ததுன்னை த்தானேயம்மா
எங்கள்குல விளக்காகிக் காத்ததாயே
கற்றையொளிச் சடையாளே அடிய ருங்கள்
கவினடியே ஏத்துகின்றோம் அருள்க தாயே
மற்றெதுவும் துணையல்ல மாதா உன்தன்
மலர்த்தாளே வேண்டுகின்றோம் தருக தாயே.

## இந்திரன் அம்மன் துதி

கண்ணை விழித்து எழுந்திட்டால்
கருதும் தெய்வம் நீயன்றோ
உண்ண மறந்த துண்டானால்
உன்னை மறந்த தறியேனே
எண்ணும் எண்ணம் எல்லாமே
எங்கள்அம்மன் உன்னையன்றி
மண்ணிற் பிறிது நானறியேன்
மலரார் பாதம் காட்டாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தச் சிறிய இடர்வரினும்
என்தன் இரண்டு கைகூப்பி
உந்தன் அருளை இரந்திட்டேன்
உற்ற துயரம் போக்கிடுவாய்
வந்த பிறவித் தொடர் பறுத்தேன்
வல்ல இந்திரன் அம்மனுனை
சிந்தை களிக்கச் சேவித்தேன்
செய்க அருளை வேண்டினனே

## வல்லிபுர ஆழ்வார் துதி

அஞ்சுதலை நாகமதில் ஆடும் திருமாலே
அஞ்சுதலை நீக்கி அருளாள்க - தஞ்சமென
நின்னடியைச் சேர்ந்த நிகரிலாத அன்னையை
பொன்னடியிற் சேர்ப்பாய் புகுந்து

## சந்நதி முருகன் துதி

ஆறுமுகா என்றவுடன் ஆறுதலைத் தந்தவா
ஆனதெல்லாம் நீயே யென் ஆறு முகமானவா
மான மிகு மங்கையைரைப் பாகமாக கொண்டவா
உனதருளே எனக்கன்றி வேறோன் றெனக் குண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்க்கை வரலாறு

எழில் கொஞ்சும் ஈழவள நாட்டின் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப்பகுதியில் துன்னாலை தெற்கு கிளான் எனும் இடத்தில் அமரர் இரத்தினம் அவர்கள் துரைச்சாமிக்கும் தெய்வானைப் பிள்ளைக்கும் ஆறாவது மகனாக ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பதாம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ந் திகதி அவதரித்தார். சிறு வயதில் ஆரம்பக் கல்வியை துன்னாலை தெற்கு தமிழ் கலவன் பாடசாலையிலும் பின் இடைநிலைக்கல்வியை கரவெட்டி திருஇருதயக் கல்லூரியிலும் கல்வி பயின்று கொண்டிருக்கும் காலங்களில் வீட்டு நிலமை காரணமாக தொழில் விடயங்களில் தகப்பனுக்கு உதவியாக கடமை புரிந்தார்.

அதன் பின் புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் கனரக வாகன இயக்குனராக 15 ஆண்டுகள் தொழில் புரிந்தார். இவ்வாறு இருக்கும் காலத்தில் தன் சொந்த ஊரான துன்னாலையில் உள்ள ஆறுமுகம் சின்னத்ததங்கத்தின் மூத்த புதல்வி ஆழகரத்தினத்தை (இராசாத்தி) 1971ம் ஆண்டு வாழ்க்கைத் துணைவியாக ஏற்று நக்கீரன், பகீரதன், சசிகரன் எனும் மூன்று புதல்வர்களுக்கு தந்தையானார்.

அதன்பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1981ம் ஆண்டின் இடைக்காலப்பகுதியில் ஐரோப்பிய நாடான ஜேர்மன் நாட்டிற்கு சென்று சிறிது காலத்தில் நாடு திரும்பி மீண்டும் மத்தியகிழக்கு நாடான சவுதி அரேபியாவிற்கு கனரக வாகன இயக்குனராக சென்று தொடர்ந்து 12 ஆண்டுகள் அங்கு பணிபுரிந்து நாடு திரும்பினார்.

அதன் பின் தனது மூத்த புதல்வனை துன்னாலை கிழக்கைச் சேர்ந்த வாமதேவன் சரஸ்வதி தம்பதிகளின் புதல்வி கலையரசி (வாசுகி) க்கு மணம் முடித்து வைத்து கௌசிகன், கௌதமன் என்னும் இரு பேரர்களை கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நாட்டு நிலமை காரணமாக தனது இளைய இரு புதல்வர்களையும் பிரித்தானியாவிற்கு அனுப்பி வைத்தார். அவரது இரண்டாவது புதல்வனை துணுக்காயில் வாழ்ந்த மாணிக்கவாசகர் கமலேஸ்வரி தம்பதிகளின் புத்திரி மலர்விழியை மணம் முடித்து வைத்து ஜெனகன், ஜெனனிகா என்ற இரு பேரப்பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தார். தனது கடைசி மகனை துன்னாலை கிழக்கைச் சேர்ந்த பாலகிட்டினர் சாந்தமலர் (இந்திரா) தம்பதிகளின் புத்திரி பாலநந்தினியை மணம் முடித்து வைத்து சபிதா, சஜிதா என்ற இரு பேத்திகளை கண்டு மகிழ்ந்தார்.

அமரர் அவர்கள் தனது வாழ் நாளில் தனது குலதெய்வமான பிரத்தியங்கிலி காளி அம்பாள் ஆலய நிர்வாகத்தில் பொருளாளராகப் பதவி வகித்த காலத்தில் ஆலய திருப்பணி வேலைகளில் மிகவும் விருப்பத்துடனும் பக்தியுடனும் ஈடுபட்டு அக்காலத்தில் காளி அம்மனின் 3 குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) வைபவத்தை நடத்தி வைத்தார்.

இவர் தனது சகோதர சகோதரி குடும்பத்துடன் மிகவும் அன்பாகவும் பாசத்துடனும் பழகுவார். தனது முதுமைக்காலத்தில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் உயர்வைக்கண்டு மகிழ்வுற்று இருந்த காலத்தில் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். இவ்வாறு இருக்கும் போது கடந்த 02.09.2016 வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணியளவில் தனது மனைவி, மகன் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள் சூழ்ந்து இருக்க வல்லிபுரமாயவன் திருவடி சேர்ந்தார்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## ஆருயிர்த்துணைவியின் துயரக்குரல்

பாசமுடை பத்தாவே? பாங்கான என் முத்தே!
நேசமுடை என்துரையே நிர்மலனே எம்வித்தே!
சோடிப்பறவைகளாய் கூடிநாம் வாழ்ந்தகதை
ஓடிப்போயினதோ வாடியதோ எங்கள் கதை
மக்கள் மயங்கியழ மனைவிநான் மாய்ந்து அழ - மரு
மக்கள் சேர்ந்து அழப் பேரர்களும் பிதற்றியழ
கட்டியவளென்னைக் கண்கலங்கித் தவிக்கவிட்டு
பெட்டியிலே நீர் போன மாயமென்ன என்னை விட்டு
மறுபிறப்பு என்ற ஒன்று மறுபடியுமிருந்திட்டால்
மறுமுறையும் வந்திடய்யா மணவாளன் ஆகிவிடு.

## மூத்தமகன் நக்கீரனின் சோகம்

அன்புடனே அறிவூட்டி ஆதரவாய் ஒளியூட்டி
பண்புவழிபல காட்டி பார்வாழ்வில் உயர்வேற்றி
மூத்தவன் நான் முத்தென்று முழுநிலவே தானென்று
காத்த என் அப்பாவே! கலங்குகின்றேன் நானின்று
அள்ளி அமுதூட்டி பள்ளிக்கனுப்பி வைத்தீர் - இப்போ
கொள்ளி வைத்தேன் நானுமக்குக் கொடும்பாவி யானேனே!

## மகன் பகீரதனின் பாசநினைவலைகள் (லண்டன்)

கடல்கடந்து நாம் சென்று காசுபணம் உழைக்க வென்று
உடல் நொந்து உழைத்தெம்மை அனுப்பினீர் நீர் அன்று
மகிழ்ச்சியாய் நாம் வாழ மாய்ந்தீரே எம் அப்பா!
நெகிழ்ச்சியாயிருக்குதையோ இதை எண்ண எம்மப்பா!
தொலைபேசி எடுத்துச் சுகசேமம் தான் கேட்டீர் - இப்போ
தொலைதூரம் போய்விட்டீர் யாரெம்மைச் சுகம் கேட்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைமகன் சகிகரனின் சஞ்சலக்குரல் (லண்டன்)

கொடுநோய் வந்ததுவோ கொற்றவனே உந்தனுக்கு
பெருநோய் வந்ததுவோ பெற்றவனே உங்களுக்கு!
அப்பாவைப் பார்த்துவிட தப்பாது வருவோமென்று
நப்பாசை கொண்டோம் நாம் நடக்கவில்லை அது இன்று
தந்தையே விந்தையாய் மறைந்தெங்கே போனீரோ!
சிந்தை கலங்குகின்றோம் நீரென்ன ஆனீரோ!

## மருமகள்மாரின் மாசில்லாக் கண்ணீர்

மாமா என அழைக்க அழைத்த வாய் பாலூறும்
மாமா எமையழைத்தால் செவிகட்குள் தேன் பாயும்
சொப்பனங்கள் என்றுமில்லை விக்கினங்கள் ஏதுமில்லை
துர்ப்பலன்கள் ஒன்றுமில்லை துன்பம் வர எண்ணவில்லை
காலன் உமையழைக்கக் காலமதும் வந்ததுவோ
கோலமிது ஆகுமென்று கொற்றவனே ஆனதுவோ

## உடன்பிறந்தவர்களின் உரிமைக் கண்ணீர்

கூடப்பிறந்த எங்கள் கோலக்குலவிளக்கே!
ஆடவில்லை எம்மிதயம் ஆருயிரே திருவிளக்கே!
ஒரு வயிற்றில் நாம் பிறந்து ஒன்றாக நாம் வளர்ந்து
ஒரு தட்டில் சோறுண்டு ஒற்றுமையாய் நாம் மலர்ந்து
அண்ணன் அக்கா தம்பியென அனைவரும் அகமகிழ்ந்து
மண்ணிலே வாழ்ந்த கதை மண்ணாகிப் போயினதோ
பட்ட மரங்கள் நாம் பரிதவித்து இங்கு வாழ
விட்டனையோ நீ உயிரை போயினையோ விண் ஆள
தங்கச்சியென்றெனக்குத் தனியன்பு காட்டுமண்ணா!
தங்கமாய்ப் பேணியென்னைத் தயவு தந்துவளர்த்த அண்ணா
மண் ஆண்ட போதுமென்று விண்ணாளச் சென்ற அண்ணா
கண்ணான என்னண்ணா கனவினிலே காட்சி கொடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துன மைத்துனிகளின் சோகம்

காகம் கரையவில்லை கண்டகனவொன்றுமில்லை
மேகம் நடுங்கவில்லை விண்மீன்கள் வீழவில்லை
பல்லுவிழக்கனவில்லை பாழ்ங்கிணறு இடியவில்லை
பல்லியும் சொல்லவில்லை கள்ளிமரம் காணவில்லை
அவசரமாய் அத்தாரே! அமருலகு போனதுமேன்
அவமோ இனி எம்வாழ்வு ஆபத்தாய் ஆனதுமேன்

## பெறாமக்களின் பேதலிப்பு

சித்தப்பா என நாமழைக்கச் சிரிப்பாயே நீ அழகாய்
பெத்தப் பாவாகப் பேணினாய் எமைப் பெருமளவாய்
மரணமது மாந்தர்க்கு மண்வாழ்வில் நியதியன்றோ!
தருணமது வந்து விட்டால் தப்புவதும் இல்லை யன்றோ!
பெரியப்பா எங்கள் பெருமை மிகு பெரும் உறவே
இந்திரா அம்மனருள் ஈந்திடுவாள் சாந்தி பெறு
சுந்தரவடிவேலன் துணையிருப்பான் சாந்தியுறு

## பேரப்பிள்ளைகளின் ஆற்றாமைக் கண்ணீர்

அப்பப்பா! அப்பப்பா எங்கே நீ போயினையோ!
எப்பப்பா இனிவருவாய் என்னதான் ஆயினையோ!
கச்சான் வாங்கப் போயினையோ கந்தசாமி கோயிலுக்கு
எச்சாமம் சென்றாலும் வந்துவிடு எம் வாயிலுக்கு
சொக்கா வாங்கப்போனாயோ சொல்லாமற் கொள்ளாமல்
நிக்காமல் வந்துவிடு எம்மனத்தைக் கிள்ளாமல்
நீயில்லா எம் வீடு நீரில்லாப் பெருங்காடு
தாயில்லாக் குஞ்சுகளாய் தவிக்கின்றோம் வந்துவிடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள் புலம்பல்

தூயவனே துரைச்சாமி பெற்றெடுத்த இரத்தினமே!
மாயவனே போச்சுதடா மகிழ்ச்சியெலாம் அத்தினமே
நல்லவனாய் வல்லவனாய் நாலுபேர் போற்றுமுன்னை
மெல்லவந்து கவர்ந்தானே கூற்றுவனாம் அன்று உன்னை
ஊரில் ஒரு உத்தமனாய் உறவுகளில் வித்தகனாய்
பேரும் பெருமைகளும் கொண்டதோர் முத்தவனாய்
போய்விட்ட இரத்தினமே இறைவனிடம் போய்வாரும்
வாய்விட்டு அஞ்சலித்தோம் வல்லவனே போய்வாரும்

ஓம் சாந்தி சாந்தி

## தேற்றம்

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மதுவழியே நாம் வோமளவும்
எமக்கென்ன என்று இட்டு உண்டிரும்

மிருசுவில் தமிழ்தாசன்
17, பன்றிக்கேணி வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை
T.P 0770453763



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா, செல்வத்துரையின் உள்ளத்திலிருந்து..........

நாம் பதின்மர் அதில் ஆறாவது தம்பி அமரர் இரத்தினம். எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவால் வாடுகிறேன். மரணச் செய்தியை தொலைபேசி மூலம் அறிந்ததும் அதிர்ச்சியடைந்தேன். ஆழ்ந்த கவலை அடைந்தேன் சிரித்த முகம், திருநீற்றுப் பூச்சு, நடுவில் ஒரு சந்தனத் திலகம் எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு இவை எல்லாம் ஒருங்கே அமைந்தவர் தான் தம்பி இரத்தினம். துள்ளித் திரிந்த பராயத்திலே ஓடி ஆடிக் கூடி விளையாடியது இன்றும் எனது மனதில் நிழலாடுகிறது. நீயொரு கடின உழைப்பாளி உழைப்பால் உயர்ந்தோர் பட்டியலில் உன்னையும் சேர்ந்துக் கொள்கிறேன். குலதெய்வங்களைத் தவறாது வணங்குவாய் பூசை ஆராதனைகளில் தவறாது பங்கு கொள்வாய். உற்சவங்களில் பங்காளனாய் சிறப்பிப்பாய் ஏனோ தெய்வங்கள் எல்லாம் ஒன்று கூடி உனது உயிரைக் காலனைக் கொண்டு கவர்ந்து சென்று தங்கள் திருப்பாதார விந்தங்களில் சேர்த்துக் கொண்டனர் போலும் காலன் செய்த கொடுமை ஆறாத் துயரைத் தந்துள்ளது. கலங்குகின்றேன் பூவுலக வாழ்வின் இன்னமும் சிறிது காலம் தொடர்ந்து இருந்திருக்கலாம் விதி விடவில்லை. உனது இல்லாள், புதல்வர், மருமக்கள், பேரர்கள் அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்ந்தி விட்டு மீளாத் துயிலில் உறங்கிவிட்டாய். பிறப்பதும், பிறந்தவர் இறப்பதும் உலக நியதி ஆண்டவன் உலகிற்குச் சேவை செய்யவென உன்னைப் படைத்தான். பிறந்தாய் சேவை முடிந்ததும் திருப்பி அழைத்தான் சென்றுவிட்டாய். படைக்கும் போது பிறப்பும், திருப்பி அழைக்கும் போது இறப்பும் வாழ்க்கைச் சக்கரமாகிறது. இதற்கு நீயேது விதி விலக்காவது என் செய்வது உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! சாந்தி !!!

''தோற்றும் உயிரனைத்தும் தரணியிலே மறைதல்
மாற்ற முடியாது என்று சொன்னாரே - கூற்றன் வழி
சென்றிறையைச் சேர்ந்தார் தம்பி இரத்தினம் துயரகற்றி
நன்றே வாழ்க நயந்து''. என்று மன அமைதி யடைவோமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளும்

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு 'ஆ' எனும் ஆன்மா 'லயம்' எனும் ஒடுங்குகின்ற நிலை பெறுவதால் 'ஆலயம்' என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஆலயத்தில் எப்படியான அணுகுமுறைகள் கொண்டு செயற்பட வேண்டும் என்பதை ஆகமங்கள் வரையறுத்து கூறுகின்றன. இந்த ஆகம முறைகள் முழுமையாக செயற்படுத்த முடியாவிடினும் ஓரளவிற்கேனும் அந்த அணுகுமுறைகளை கடைப்பிடித்தால்தான் நாம் முழுமையான மனிதப் பிறப்பின் அர்த்த புஷ்டியை பெறமுடியும். எமது மனித மனமும் நிறைவான அமைதியைப் பெறும்.

ஆலய வழிபாடு என்பது எமது பாவவினைகள் அனைத்தும் நீங்கும் பொருட்டு நாம் செயற்படுத்துகின்ற அற்புத வரமாகும். எமது 'மனட்சாட்சி' நியாயமாக தன் தவறுகளை உணர்ந்து நிற்கின்ற இடமும் ஆலயமே. இங்கு நாம் மற்றவர்களைப் பார்த்து நிற்பதோ அல்லது அடுத்தவர் எமை பார்ப்பார் என்கின்ற அச்சமோ இன்றி உள்ளம் உருகி கண்ணீர் மல்கி கையெடுத்து வணங்கி, பஞ்சாங்க, அஷ்டாங்க, நமஸ்காரங்களை, முறையாக செய்ய வேண்டும். இதுதான் ஆலய வழிபாட்டின் சிறப்பாகும். உடலின் சர்வாங்கமும் இறைவனைச் சரணடைய வேண்டும்.

காற்றை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள முடியமே தவிர அதை நேரில் பார்க்க முடியாது. ஆனால் இறைவன் ஞானிகளுக்கு நேரடியாகவும், மனிதர்களுக்கு உணருகின்ற நிலையிலும் அருள் தருகின்றான். நாம் ஒரு கஷ்டத்தில் இருக்கும் போது எதிர்பாராத விதமாக எமக்கு யார் மூலமோ ஒரு நன்மை கிடைக்கின்றது. அதுவே 'தெய்வ மனுஷ்ய ரூபே' எனும் வேத வாக்கியம் இறைவனை மனித வடிவிலே நாம் காணுகின்றோம். எனவே எங்களின் நடைமுறைகள் முழுமையான ஞானநிலையை எட்டுகின்ற போது எம் கண்களுக்கும் இறைவன் தன் வடிவம் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற ஆலயங்களை சிறப்பாக பராமரிப்பதே இன்றைய முக்கிய கடமையாகின்றது. ஆலயத்தை பார்ப்பதற்கு மிகவும் அழகாக கட்டிவிட்டு நித்திய, நைமித்திய பூஜைமுறைகளை சரியான முறையில் கவனிக்காது விட்டால் அப்பாவம் அந்த ஊரையே சாரும். எனவே திருவிழாக்காலங்களிலே செய்யப்படுகின்ற வீண் ஆடம்பரங்களைக் குறைத்து அப்பணத்தை நித்தியபூஜை மற்றும் பராமரிப்பிற்கு என வைப்பிலிடுவது மிக மிக முக்கியமான விடயமாகும். நித்திய பூஜை நேரம் தவறாத நியமமாக இருப்பதே சிறப்பாகும்.

விநாயகர் மூலவராக இருக்கும் ஆலயங்களில் கஜமுகசம்ஹார சூரன் போர் நடாத்தப்பட வேண்டும். முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி சூரன்போர் நடாத்தப்படவேண்டும். அம்மன் ஆலயங்களில் நவராத்திரி மஹிஷாசுரன் போர் நடாத்தவேண்டும். சிவன் ஆலயங்களில் ஐப்பசி மாத ஜமசம்ஹார வதம் நடாத்த வேண்டும். விஷ்ணு ஆலயங்களில் தீபாவளி நரகாசுர சம்ஹாரம் நடாத்தவேண்டும். இதுவே சூரன்போர்களின் வரையறை இதைவிடுத்து பரிபார தெய்வமாக இருக்கும் மூர்த்திகளுக்கு சூரன்போர் செய்வது ஏற்புடயது அல்ல எந்த தெய்வம் மூலவரோ அதற்கே முக்கியத்துவம் கொடுத்து கிரியைகள் ஆற்றப்படவேண்டும்.

உற்சவ காலங்களில் எந்த தெய்வம் மூலமூர்த்தியாக அமைகின்றதோ அந்த தெய்வத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுவாமி புறப்பாடு செய்கின்றபோது சகோபுர உற்சவம் என கூறப்படும் சப்பறத் திருவிழாவின் போது மும்மூர்த்திகள் புறப்பாடு மேற்கொள்ளப்படவேண்டும். தேர், தீர்த்த உற்சவங்கள் எல்லாம் மூல மூர்த்தியான தெய்வமே புறப்பாடு கொள்ள வேண்டும் உற்சவங்களின் தாற்பரியம் தத்துவம் தெரியாது இன்றய கால கட்டம் மும் மூர்த்தி, பஞ்சமூர்த்தி என புறப்பாடு செய்விக்கின்றனர். சிவன் ஆலயங்களில் மட்டுமே பஞ்சமூாத்தி புறப்பாடும் முத்தேர் பஞ்சரதம் என்பன வலம் வர ஆகம நியதி உண்டு.

உற்சவ காலங்களில் தீர்த்த உற்சவத்தின் போது தீர்த்தக்கிணறு அல்லது தீர்த்தத் தடாகம், என்பனவற்றில் தீர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவக்கிரியை ஆற்றும் போது அஸ்திரதேவர் அபிஷேகம் செய்யும் போது ஆலயநிர்வாகசபைத்தலைவர் தீர்த்த உபயகாரர் போன்றவர்களை அமரவைத்து அவர்களுக்கும் அபிஷேகம் செய்யும் நிகழ்வு ஒரு சில ஆலயங்களில் செய்கின்றனர். இது மாபெரும் தவறாகும். எந்த ஆகமங்களிலும் இப்படிக் கூறப்படவில்லை. இறைவனுக்கு ஒப்பாக ஒருவரை அமரவைத்து அபிஷேகம் செய்வது பெரும் தவறு. அந்த அஸ்திரம் எனப்படும் சூலம் அல்லது வேல், அங்குசம் போன்றவற்றை தூக்கிவரும் குருவிற்கே அபிஷேகம் செய்யவேண்டும் இந்த தவறுகளை தொடராமல் நிறுத்திவிடுவது சம்பந்தப்பட்ட அனைவருக்குமே நன்மை பயக்கும்.

உற்சவ காலங்களில் வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா இவை இரண்டு நாளும் பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்படவேண்டும். சில ஆலயங்களில் தேரினால் பச்சை சாத்தி சுவாமி இறக்கப்பட்டதும் உடனடியாக அர்ச்சனை செய்யும் நிகழ்வு பஞ்சமுக, ஷண்முக, நவசக்தி என ஆலயங்களுக்கு ஏற்ப செய்கின்றனர் தேரினால் சுவாமி இறக்கப்பட்டதும் பிராயச்சித்த அபிஷேகம் செய்த பின்னரே அர்ச்சனை செய்யப்படவேண்டும். இந்த நடைமுறைகளும் கவனத்தில் கொண்டு செயற்படுத்த வேண்டிய ஒன்றாகும் உற்சவத்தில் இது முக்கியமானது.

உற்சவ காலங்களில் பூங்காவன உற்சவம் (வசந்த உற்சவம்) செய்யும் போது உள்வீதி வலம் வந்து யாகதர்சனம் நிறைவு பெற்று அதன் பின்னர் நேரடியாக பூங்காவன மண்டபம் சென்று அங்கு பூஜை உபசாரங்கள் அனைத்தும் நிறைவான பின்னர் மீண்டும் ஆலய முன்றலுக்கு வந்து கட்டியம் சொல்லப்பட்டு அதன்பின்பே வெளி வீதி பிரதட்சணம் செய்யப்பட வேண்டும். உள்வீதி வலமாக வந்து விட்டால் பின்பு வலம் பார்க்க வேண்டியது இல்லை தேர் உற்சவத்திற்கு சுவாமி எப்படி செல்கின்றதோ அதுபோலவே பூங்காவன மண்டபம் சென்று பூஜை முடிந்த பின்னரே வெளிவீதி உலா பிரதட்சணம் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். இவை சரியான உற்சவ முறைமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் நவக்கிரஹ அர்ச்சனை செய்யும் போது முதலில் நவகிரஹங்களுக்கு அர்ச்சனை செய்து பூக்களும் நீரும் கொண்டு வலம்வந்து எந்த கிரஹத்திற்கு அர்சனை செய்தீர்களோ அக்கிரஹ பாதத்திலே மலரிட்டு வணங்கி விட்டு பின்பு வந்தே மூலஸ்த்தான மூர்த்திக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தோடு நவக்கிரஹங்களின் பிரசாதம் எடுத்துவரக் கூடாது. கிரஹங்களுக்கு எல்லாம் அர்ப்பணமாகவே கொடுக்கவேண்டும். நவகிரஹ தீர்த்தமும் தலையில் தெளிக்கவேண்டுமே தவிர அதை உட் கொள்ளக் கூடாது.

தந்தையோ, தாயோ மரணித்து விட்டால் ஒரு வருடகாலம் கோயிலுக்கு செல்லக்கூடாது எனும் நியமம் ஒன்றை ஒரு சிலர் கடைப்பிடிப்பது உண்டு. ஆனால் அதனுடைய உண்மையான தாற்பரியம் ''தகனக்கிரியை'' செய்த ஒருவர் வருஷத்திவசம் முடியும் வரை ஆலயத்தின் கிரியைகளில் தர்ப்பை அணிந்து கிரியை ஆற்றக் கூடாது என்பதே நியமமாகும். அத்தோடு மங்கள வைபவங்களான திருமணம் போன்ற கிரியைகளிலும் தர்பை அணிந்து கிரியை ஆற்றுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே நியதி. தனது தகனக்கிரியை செய்தவரின் வருஷத்திவசம் வரை பன்னிருமாதமும் மாசியம் தவறாது செய்து வருஷ திவசத்தை பூர்த்தியாக்கிக் கொள்ள வேண்டும். ஆலயம் சென்று வழிபடுவதில் எந்தத் தவறும் இல்லை. பிறப்பு என்று வந்தால் இறப்பும் உண்டு இதை உணர்ந்து நம்கடமை தொடரவேண்டும். இறைவழிபாடு நிறுத்த வேண்டியது இல்லை.

நெய்வேத்தியம் செய்யும் முறைமை பற்றிய சந்தேகம் பலருக்கும் உண்டு கடவுள் எங்கே சாப்பிடுகின்றார். நாங்கள் தானே படைத்துவிட்டு சாப்பிட்டுகின்றோம் என எண்ணுகின்றனர். ''நிவேதயாமி'' என்றால் தெரிவிக்கின்றேன் என்று பொருள்படும். நெய்வேத்தியம் எப்போது சூடானதாக அதன் ஆவிமேலே எழும் வண்ணமாக மூடி வைக்க வேண்டும். ''நிவேதனம்'' செய்கின்ற போது மட்டுமே திறக்கப்பட்டு பின்னரும் மூடிவிடவேண்டும் அந்த நெய்வேத்தியத்தில் இருந்து எழும் ஆவிகலந்த வாசனையின் ஆகர்ஷணமே இறைவனை சேருகின்றது. எப்படிக் காற்றை உணருகின்றோமோ அதேபோல் இறைவனும் இந்த சூடான பதார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவிவாசனை உணர்கின்றார் அதையே நிவேதயாமி என நாம் தெரிவிக்கின்றோம். மற்றய பழவகைகள் யாவும் இறைவனுக்கு சமர்ப்பித்து கொள்ளும் நிலையாகவே பெரும் படையலாக படைத்துக் கொள்கின்றோம்.

ஆலய உற்சவ காலங்களில் அலங்காரம் செய்யப்படும் உற்சவ மூர்த்திக்கு தினமும் அதிகாலை பால் அபிஷேகம் செய்து அதன் பின்னரே வசந்தமண்டப ஆலங்காரம் மேற்கொள்ளப்படவேண்டும் இது ஒரு சில ஆலயங்களில் மட்டுமே கைக்கொள்ளப்படுகின்றது இதை எல்லா ஆலயங்களும் உற்சவ காலங்களில் கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு அலங்கார பூமாலைகள் இருவேளையும் புதிய மாலைகளாக அணிவிக்கப்படவேண்டும். நித்திய பூஜைகளில் ஏற்படுகின்ற தவறுகளை நிவர்த்தியாக்கி நிறைவான கிரியை, அபிஷேகம், உபகாரம், அலங்காரம் என்பன செய்யப்படுவதே மஹோற்சவம் மற்றும் அலங்கார உற்சவம். இவற்றில் தவறு செய்தால் அப்பாவம் அனைவருக்கும் சாரும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் கொள்ளளவேண்டும்.

அற்புதமான மனிதப்பிறப்பை நாம் பெற்றுள்ளோம் எதையும் பார்த்து, கேட்டு. உணர்ந்து, சுவைத்து. ரசித்து, மகிழ்ந்து செயற்படுகின்ற ஆறுஅறிவிற்கு சொந்தமான நாம் எமது பொய், பொறாமை, கோபம், ஆணவம், கபடம் போன்ற தீய குணஇயல்புகளால் எம்மை மிருகமாக்கி கொள்கின்றோம். இந்தப் பூமிவாழ்வில் வாழும் எல்லை இறைவனால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. இந்த வாழ்வியலில் எமது ஆன்மாவை புனிதமாக்கி வாழ்வதற்கு ஆலயங்களே அற்புதக் கூடங்களாக அமைகின்றன. எனவே அந்த ஆலய கைங்கரியங்களை சரியான முறையிலே நடைமுறைப்படுத்தி இறை அருளை நிறைவாக பெற்றுக் கொள்வோம்.

சுபமஸ்து

சிவசக்தி ஸ்ரீ ராம்.தேவலோகேஸ்வரக் குருக்கள்
(''சாரதாபீடம்'' வல்லியானந்த பிள்ளையார் வீதி, துன்னாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிகள் வடமராட்சி

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி | பருத்தித்துறை | 021 226 3254 |
| இலங்கை வங்கி | நெல்லியடி | 021 226 3260 |
| தேசிய சேமிப்பு வங்கி | பருத்தித்துறை | 021 226 3255 |
| தேசிய சேமிப்பு வங்கி | நெல்லியடி | 021 226 4936 |
| மக்கள் வங்கி | நெல்லியடி | 021 226 3256 |
| மக்கள் வங்கி | பருத்தித்துறை | 021 226 3253 |
| மக்கள் வங்கி | வல்வெட்டித்துறை | 021 226 3299 |
| கொமர்ஸல் வங்கி | நெல்லியடி | 021 226 6378/7 |
| ஹற்றன் நஷனல் வங்கி | நெல்லியடி | 021 226 4149 |
| ஹற்றன் நஷனல் வங்கி | பருத்தித்துறை | 021 226 4935 |
| சம்பத் வங்கி | நெல்லியடி | 021 226 4950 |
| செலான் வங்கி | நெல்லியடி | 021 226 5961 |

## அரச திணைக்களம்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகம் | கரவெட்டி | 021 226 3258 |
| பிரதேச செயலகம் | பருத்தித்துறை | 021 226 3259 |
| பிரதேச செயலகம் | மருதங்கேணி | 021 226 3562 |
| நகரசபை | பருத்தித்துறை | 021 226 3213 |
| நகரசபை | வல்வெட்டித்துறை | 021 226 3271 |
| பொலிஸ் நிலையம் | பருத்தித்துறை | 021 226 3227 |
| பொலிஸ் நிலையம் | நெல்லியடி | 021 226 3222 |
| பொலிஸ் நிலையம் | வல்வெட்டித்துறை | 021 226 3573 |
| மின்சாரசபை | மாலுசந்தி | 021 226 3257 |
| இ.போ.வ.சபை | பருத்தித்துறை | 021 226 3266 |
| வடிசாலை | திக்கம் | 021 226 4001 |
| காணிப்பதிவகம் | வடமராட்சி | 021 226 3272 |
| வீதி அபிவிருத்திச்சபை | பருத்தித்துறை | 021 226 3553 |
| மதுவரித் திணைக்களம் | பருத்தித்துறை | 021 226 3266 |
| தபாற்கந்தோர் | பருத்தித்துறை | 021 226 3250 |
| தபாற்கந்தோர் | கரவெட்டி | 021 226 3252 |
| ஆதார வைத்தியசாலை | பருத்தித்துறை | 021 226 3261 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மாவட்ட வைத்தியசாலை | வல்வெட்டித்துறை | 021 226 3530 |
| பல.நோ.கூ.சங்கம் | பருத்தித்துறை | 021 226 3699 |
| பல.நோ.கூ.சங்கம் | கரவெட்டி | 021 226 3263 |
| பல.நோ.கூ.சங்கம் | புலோலி | 021 226 3275 |
| பல.நோ.கூ.சங்கம் | உடுப்பிட்டி | 021 226 4036 |
| பல.நோ.கூ.சங்கம் | மருதங்கேணி | 021 226 8935 |

## பாடசாலைகள் - வடமராட்சி

| | |
|---|---|
| யா/ஹாட்சிக் கல்லூரி | 021 226 3292 |
| யா/மெ.பெ.உ.பாடசாலை | 021 226 3020 |
| யா/நெ.ம.ம.கல்லரி | 021 226 3017 |
| யா/விக்கினேஸ்வராக் கல்லூரி | 021 226 3138 |
| யா/வடஇந்து மகளிர் கல்லூரி | 021 226 3221 |
| யா/உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை | 021 226 3767 |
| யா/வல்வை சிதம்பராக் கல்லூரி | 021 226 3423 |
| யா/வல்வை மகளிர் கல்லூரி | 021 226 4746 |
| யா/வல்வை சிவகுரு வித்தியாலயம் | 021 373 4128 |
| யா/பரு வேலாயுதம் மகா வித்தியாலயம் | 021 226 3564 |
| யா/தேவரையாளி இந்து கல்லூரி | 021 226 3879 |
| யா/திருஇருதயக் கல்லூரி கரவெட்டி | 021 226 7353 |
| யா/புற்றளை மகாவித்தியாலயம் | 021 226 4262 |
| யா/இமையாணன் மகாவித்தியலாயம் | 021 300 1650 |
| யா/கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலம் | 021 226 3427 |
| யா/அல்வாய் சின்னத்தமமபி வித்தியாலயம் | 021 320 5391 |
| யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம் | 021 226 4220 |
| யா/வல்வெட்டி இந்து த.க.பாடசாலை | 021 373 4444 |
| யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 021 373 5690 |
| யா/அரசடி மெ.மி.த.க.பாடசாலை | 021 226 2500 |
| யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் | 021 226 2602 |
| யா/யார்க்கரு வித்தியாலயம் | 021 226 7744 |
| யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் | 021 226 2697 |
| யா/ஞானசாரியார் கல்லூரி | 021 226 4040 |
| யா/யாழ் இராமநாதன் கல்லூரி (சுன்னாகம்) | 021 222 5923 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உள்ளூர் வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் நேரடியாக கலந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் இம் மலரினை வெளியிட உதவி புரிந்தவர்களுக்கும் இன்றைய அந்தியேட்டி நிகழ்வுகளிலும் அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும் மதியபோசனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தோருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மற்றும் சுற்றத்தார்களுக்கும் உளம்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

துரைசாமி + தெய்வானைப்பிள்ளை

- ❖ தங்கராசா
- ❖ சரஸ்வதிஅம்மா + பேரம்பலம் (UK)
  - சாந்தகுமாரி (UK)
  - வசந்தகுமாரி (UK)
  - ராஜவிசுவலிங்கம் (UK)
  - விஜயகுமாரி (Newzeland)
  - சந்திரகுமாரி (UK)
- செல்வத்துரை(UK) + இந்திராதேவி(UK)
  - பானுதேவா(UK)
  - பானுமதி(UK)
  - ஜெயதேவா(UK)
  - நகுலதேவா (Austaralia)
- ஆனந்தராசா + யோகேஸ்வரி
- ❖ தேவராசா + மனோன்மணி
  - தேவராசா + மனோன்மணி
    - சாதனா
    - ரஞ்சனா(UK)
    - ராகவன்(UK)
- இரத்தினம்
  - நக்கீரன் + கலையரசி (வாசுகி)
    - கௌசிகன்
    - கௌதமன்
  - பகீரத + மலர்வி
    - ஜெனக
    - ஜெனன
- குலசிங்கம்(UK) + ❖ சுகிர்தமணி
  - கஜேந்திரா(UK)
  - துசிதா(UK)
- ❖ வீரசிங்கம்(UK) + கங்காதேவி
  - யோகதாரணி(U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ஆறுமுகம் + சின்னத்தங்கம்

- அழகரத்தினம் (இராசாத்தி)
- செல்வரத்தினம்
- சிவலிங்கம் + சிவதேவி
  - தீனதயாளன் (France)
  - தீனகோகுலன்
  - சுகன்யா
- ❖ தங்கரத்தினம் + சண்முகநாதன்
- இராசலட்சுமி + காராளசிங்கம்
  - நித்தியா
  - நிசாந்தினி
  - நிலக்சி

...லிங்கம்(UK) + ❖ சுகிர்தமணி
- ...ந்திரா(UK)
- ...தா(UK)

❖ வீரசிங்கம்(UK) + கங்காதேவி
- யோகதாரணி(UK)

தங்கமணி + ஜெயானந்தம்
- ❖ காண்டீபன்
- யாழினி
- ❖ கலைவாணன்

பாலசிங்கம்(UK) + செல்வரத்தினம்
- கோகுலன்(UK)
- கோமளா(UK)
- கோபிகா(UK)

**...த்தினம்** + அழகரத்தினம் (இராசாத்தி)
- ...ரன் + ...பரசி (...கி)
  - ...கன்
  - ...மன்
- பகீரதன்(UK) + மலர்விழி(UK)
  - ஜெனகன்(UK)
  - ஜெனனிகா(UK)
- சசிகரன்(UK) + பாலநந்தினி(UK)
  - சபிதா(UK)
  - சஜிதா(UK)

❖ அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.

**இந்த மாற்றம் உலக நியதியாகும்.**

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**





தமிழ்ப்பூங்கா — நெல்லியடி

T.P - 28

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org